# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:12** **தேதி:27.12.2014**

## மத்திய சங்க செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

**BSNLஐ பாதுகாக்கும் இயக்கம் என மக்கள் சந்திப்பு இயக்கத்தின் பெயர் மாற்றம்:-** 19.12.2014 புதுடெல்லியில் கூடிய FORUM கூட்டம் ”மக்கள் சந்திப்பு இயக்க”த்தை **“BSNLஐ பாதுகாக்கும் இயக்கம்**” என பெயர் மாற்றி உள்ளது. BSNLஐ பாதுகாக்க வேண்டும் என்கின்ற நமது நோக்கம் மக்கள் மத்தியில் திறம்பட செல்வதற்காக இந்த பெயர் மாற்றம் பயன்படும். மாவட்ட சங்கங்கள் இதனை கணைக்கில் எடுத்து **’BSNLஐ பாதுகாக்கும் இயக்க**’த்தை சக்தியாக நடத்த வேண்டும்.

**ERP விளக்கக் கூட்டம்:-** தேசியகவுன்சில் ஊழியர் தரப்பின் கோரிக்கைக்கு இணங்க நிர்வாகம், ERP தொடர்பான ஒரு விளக்கத்தை ஊழியர் சங்கங்களுக்கு வழங்கியது. காசியாபாத்தில் உள்ள ERP மையத்திலிருந்து GM(ERP) திரு ராமன் அகர்வால் மற்றும் அவர் தனது அதிகாரிகள் குழுவுடன் இந்த விளக்க PRESENTATIONஐ வழங்கினார். ஊழியர் தரப்பிலிருந்து நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, தலைவர் தோழர் பல்பீர்சிங், துணை பொது செயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி, NFTEயின் பொது செயலாளர் தோழர் சந்தேஸ்வர் சிங் மற்றும் BSNL MS சங்கத்தின் பொது செயலாளர் தோழர் சுரேஷ் குமார் ஆகியோர் கலந்துக் கொண்டனர். அதில் ஊழியர் தரப்பு தலைவர்கள் எழுப்பிய பல கேள்விகளுக்கு GM(ERP) விளக்க அளித்தார். அவர் பதிலளிக்கும் சமயத்தில் நிறுவனத்தின் மனித வளம் மற்றும் வளங்களை மிகச்சிறப்பாக பயன்படுத்துவதற்காகவே இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதே தவிர ஊழியர்களை உபரியாக்கும் நோக்கத்துடன் இது கொண்டு வரப்படவில்லை என்று கூறினார். ERP திட்டத்தில் ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்று ஊழியர் தரப்பு கேட்டதனை அவர் ஏற்றுக் கொண்டார். மாநிலங்களில் ERP திட்டம் அமுலாக்கும் போது ஊழியர்கள் பாதிக்கப்படாத வண்ணம் தேவையான நடவடிக்கைகளை நிர்வாகம் எடுக்க வேண்டும் என்றும் ஊழியர் தரப்பில் கோரப்பட்டது. இது தொடர்பாக தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என நிர்வாகத்தின் தரப்பில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

**30 அம்ச கோரிக்கைகளுக்காக நிர்வாகத்துடன் JAC சந்திப்பு:-** 22.12.2014 அன்று 30 அம்ச கோரிக்கைகள் தொடர்பாக JACக்கும் நிர்வாகத்திற்கும் இடையே பேச்சு வார்த்தை நடைபெற்றது. 26.11.2014 அன்று RLC நடத்திய பேச்சு வார்த்தையில் JAC உடன் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு சுமுக தீர்வை காண வேண்டும் என அவர் நிர்வாகத்திற்கு வழி காட்டினார். ஆனால் நிர்வாகம் இந்தக் கூட்டத்தை நடத்தாமல் இருந்தது. 05.01.2015 அன்று மீண்டும் RLC உடன் அடுத்தக்கட்ட கூட்டம் நடைபெற உள்ளதால் இந்தக் கூட்டம் 22.12.2014 அன்று நடைபெற்றது. JACயின் அமைப்பாளர் தோழர் P.அபிமன்யு, JACயின் தலைவர் தோழர்

சந்தேஸ்வர் சிங், BSNL ஊழியர் சங்கத்தின் தலைவர் தோழர் பல்பீர் சிங், துணைபொது செயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி, தோழர் ஜெயபிரகாஷ் GS FNTO, தோழர் R.C.பாண்டே GS BTEU BSNL, தோழர் சுரேஷ் குமார் GS BSNL MS, தோழர் ராஜேஷ் கண்ணா PRESIDENT SNATTA, தோழர் ரஷீத் கான் AGS TEPU, தோழர் S.D.ஷர்மா AGS ATM BSNL, தோழர் B.D.ஷர்மா AGS FNTOBEA ஆகியோர் JACயின் சார்பாக கலந்துக் கொண்டனர். BSNLன் ED(Finance) திருமதி சுஜாதா ராய் இந்தக் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். 27.11.2014 அன்று நடைபெற்ற வேலை நிறுத்தத்தின் 30 அம்ச கோரிக்கைகளும் விவாதிக்கப்பட்டன. ஊழியர் தரப்பில் கோரிக்கைகளின் நியாயங்களை எடுத்துரைக்கப்பட்டது. RLCயின் வழிகாட்டுதலின் கட்டாயத்தின் பேரிலேயே இந்தக் கூட்டம் நடைபெற்றதால் கோரிக்கைகளில் எந்த ஒரு பெரிய முன்னேற்றமும் ஏற்படவில்லை.

விவாதங்களின் நடுவே நிர்வாகம், கீழே தரப்பட்டுள்ள தகவல்களை கூடுதலாக தெரிவித்தது:-

1) 01.01.2007க்கு பின் பணியிலமர்த்தப்பட்டவர்களுக்கு கூடுதல் ஒரு இன்கிரிமெண்ட் தருவதை நிர்வாகக் குழு ஏற்கனவே ஒப்புதல் வழங்கி விட்டது என்றும் அதற்கான நிலுவைத்தொகை தருவதற்கான ஒரு குறிப்பை நிர்வாகக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் GM(ESTT) தெரிவித்தார். ஊழியர் தரப்பில் அவர்களுக்கு 30% FITMENT BENEFIT தரப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்.
2) நேரடி நியமன ஊழியர்களுக்கு 30% ஓய்வூதிய பலன்கள் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை பொறுத்தவரை, ஊழியர்களின் அடிப்படை ஊதியம் மற்றும் பஞ்சப்படியில் 2%த்தை இதற்காக வழங்க வேண்டும் என உயர் மட்டக் குழு ஏற்கனவே நிர்வாகத்திற்கு பரிந்துரைத்துள்ளது. புதிய ED(FINANCE)ஐ இது தொடர்பாக மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்ற்று நிர்வாகம் கேட்டுக் கொண்டதின் அடிப்படையில் அவர் 2%க்கு பதிலாக 3%ஆக பரிந்துரைத்துள்ளார்.
3) விடுபட்ட TSM மற்றும் காசுவல் ஊழியர்கள் நிரந்தரம் தொடர்பாக, இந்த விஷயத்தை ATTORNEY GENERALக்கு பரிந்துரைத்துள்ளதாகவும், அவர் தனது பதிலை பதினைந்து நாட்களுக்குள் தருவார் என எதிர்பார்ப்பதாகவும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.
4) SR.TOA, TM, DRIVER உள்ளிட்ட கேடர்களின் ஊதிய விகிதங்களை உயர்த்துவதற்கு ஒரு குழுவை மீண்டும் அமைப்பதற்கு நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது.
5) MTNL பகுதியில் பணியாற்றும் BSNL ஊழியர்களுக்கு ரூ.200/- மதிப்புள்ள சிம் கார்ட் வழங்குவது தொடர்பாக பொருளாதார பிரச்சனைகள் தொடர்பாக நிர்வாகப் பிரிவு கணக்கிட்டு வருவதாக GM(ADMN) தெரிவித்தார்.

**யூனியன் பாங்க் ஆஃப் இந்தியாவின் MOU நீட்டிப்பு:-** சிறிது காலத்திற்கு முன் போன யூனியன் வங்கியுடனான ஒப்பந்தம் காலாவதியாகிப் போயிருந்ததால் இதனை புதுப்பிக்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் கேட்டுக் கொண்டிருந்தது. 22.12.2014 அன்று நிர்வாகம் அதனை புதுப்பித்து உள்ளது.

**JAO தேர்வு முடிவுகள் மறுபரிசீலனை:-** இறுதியாக நடைபெற்ற JAO தேர்வில் ஆங்கிலத்தில் தேர்வு எழுத விருப்பம் தெரிவித்து பின்னர் இதர மொழிகளில் பதில் எழுதியுள்ளவர்களின் தேர்வு முடிவுகளை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் கேட்டிருந்தது. இது தொடர்பான விவரங்களை மாநில தலைமை பொது

மேலாளர்களிடமிருந்து கேட்கப்பட்டுள்ளது. நமது கோரிக்கை சாதகமாக பரிசீலிக்கப்படும் என நம்புகிறோம்.

**கேடர் பெயர் மாற்றக்குழுவின் அடுத்தக் கூட்டம்:-** கேடர் பெயர் மாற்றக்குழுவின் அடுத்தக் கூட்டம் 09.01.2015 அன்று நடைபெற உள்ளது. இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும். கடந்தக் கூட்டத்தில் ஊழியர் தரப்பு சில புதிய முன்மொழிவுகளை கொடுத்துள்ளது. அதனை BSNL ஊழியர் சங்கம் CMDயின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளது. எனவே எதிர் வரும் கூட்டத்தில் சில முன்னேற்றங்கள் ஏற்படும் என நம்புவோம்.

**இலக்கை அடையாத BSNLன் உயர் அதிகாரிகளின் மீதி நிர்வாக நடவடிக்கை:-** இலக்கை அடையவில்லை என்றால் BSNLன் உயர் அதிகாரிகள் மீது நிர்வாக நடவடிக்கை எடுக்கப்படும் என தொலை தொடர்பு செயலாளர் திரு ராகேஷ் கார் எச்சரித்துள்ளார். சமீபத்தில் நடந்த கூட்டத்தில் பிரதம மந்திரி நிர்ணயித்த தேசிய ப்ராட்பேண்ட் வலைத்தளம் (NATIONAL BROADBAND NETWORK) சேவையை நிறைவேற்றுவதில் 'தாமதமாக முடிவெடுப்பது' மற்றும் 'காலக்கெடுவுக்குள் முடிக்காமல் இருப்பது' ஆகிய காரணங்களுக்காக BSNLன் உயர் அதிகாரிகளை திரு கார் எச்சரித்துள்ளார் என செய்திகள் தெரிய வந்துள்ளது. தேசிய ப்ராட்பேண்ட் வலைத்தளம் (NATIONAL BROADBAND NETWORK) சேவை தொடர்பாக இவ்வளவு அக்கறைப்படும் அவரோ அல்லது அரசாங்கமோ BSNLன் வலைத்தள (NETWORK) விஸ்தரிப்பு தொடர்பாக ஏற்பட்டுள்ள காலதாமதம் மற்றும் தோல்விகள் தொடர்பாக எந்த ஒரு அக்கறையும் செலுத்தாதது ஏன் என்பது நமக்கு புரியாத புதிராக உள்ளது.

**ஏர்டெல் நிறுவனம் தனது இண்டெர்நெட் அழைப்பு கட்டணத்தை 16 மடங்கு உயர்த்தி உள்ளது:-**
ஏர்டெல் தனது இண்டெர்நெட் அழைப்புகளுக்கான கட்டணத்தை 16 மடங்கு உயர்த்தி உள்ளது. பெரும்பாலான மக்கள் வெளிநாட்டில் உள்ள தமது குடும்ப உறுப்பினர்களுடன் பேசுவதற்கு இண்டெர்நெட்டை பயன்படுத்தி வருகின்றனர். இந்த வசதி தரும் நிறுவனங்கள் சாதாரண DATA கட்டணத்தையே இதற்கு நிர்ணயித்துள்ளனர். எனினும் ஏர்டெல் இதில் பலமடங்கு கட்டணத்தை உயர்த்தி உள்ளது. வோடோபோன், ஐடியா உள்ளிட்ட இதர தனியார் நிறுவனங்களும் இதே முறையை கையாள்வார்கள். ஒரு ஆரோக்கியமான போட்டி இல்லையென்றால் தனியார் நிறுவனங்கள் மக்களை எவ்வாறு கொள்ளையடிப்பார்கள் என்பதற்கு இது மிகச்சிறந்த உதாரணம். ஒரு திறமையான போட்டியை கொடுக்கும் வகையில் ஒரு உறுதியான சிறப்பான BSNL நிறுவனம் இருப்பதால் மட்டுமே சாதாரண மக்களும் பயன்படுத்தும் வகையில் தொலை தொடர்பு கட்டணம் இருக்கும். இந்த செய்தியையும் நமது 'BSNLஐ காக்கும் இயக்கதிலும்" வலுவாக கொண்டு செல்ல வேண்டும்.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்.**